(ஈ) தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதாவை இப் பேரவை முன் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

9. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதா

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதாவை இந்த மாமன்றத்தின் திருமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதாவை அறிமுகப்படுத்து கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் நாடு 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடை கின்றன. மீண்டும் வெள்ளிக்கிழமை, 28-ம் தேதி காலை 9 மணிக்கு பேரவை கூடும். வணக்கம்.

பி.ப. 1-22 பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

10. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

‘ ஏதுமில்லை ’